# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை– 2018

| தரம் - 8 | குடியியற்கல்வி | நேரம் : 2.00 |
| --- | --- | --- |

சுட்டெண்: ....................

### பகுதி – I

❖ மிகப் பொருத்தமமான விடையைத் தெரிந்தெடுத்து அதன் கீழ் கோடிடுக.

01. இலவச கல்வி முறையை இலங்கைக்கு அறிமுகம் செய்த பெருமைக்குரியவர்.
    1) திரு. D.S. சேனநாயக்க
    2) தரு. S.W.R.D. பண்டாரநாயக்க
    3) கலாநிதி. C.W.W. கன்னங்கரா
    4) திரு. டட்லி சேனநாயக்க

02. "ஒருவர் எல்லோருக்கும் எல்லோரும் ஒருவருக்கு" என்ற மகுட வாசகத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் சேவை நிறுவனம்.
    1) வைத்திய சேவை
    2) கூட்டுறவுச் சேவை
    3) கல்விச் சேவை
    4) போக்குவரத்துச் சேவை

03. எந்தவொரு சமூகத்திலும் காணப்படும் மிகச்சிறியதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான அடிப்படை அலகு
    1) கிராமம்
    2) நகரம்
    3) குடும்பம்
    4) நாடு

04. சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்து நடைமுறைப்படுத்தும் ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச அமைப்பு.
    1) யுனெஸ்கோ
    2) யு.என்.எச்.சீ.ஆர்
    3) யுனிசெவ்
    4) உலகசுகாதார தாபனம்

05. உடல் நடுங்குதல், கூக்குரலிடுதல், ஓடுதல் போன்ற உடல் வெளிப்பாடுகளை வெளிப்படுத்தும் மனவெழுச்சி
    1) கோபம்
    2) கவலை
    3) மகிழ்ச்சி
    4) பயம்

06. ஜனநாயக ரீதியான தலைவர் ஒருவரிடம் காணப்படவேண்டிய பண்பு.
    1) பாராபட்சம் காட்டுதல்
    2) தொலைநோக்குச் சிந்தனை
    3) சுயநலம்
    4) தன்னிச்சையாக நடத்தல்

07. இலங்கையில் வாழும் பெரும்பான்மை இனத்தவர்.
    1) சிங்களவர்
    2) முஸ்லீம்
    3) தமிழர்
    4) பறங்கியர்



kalvi.lk

08. 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி இலங்கையில் பேரழிவை ஏற்படுத்திய இயற்கை அனர்த்தம்.

1) வெள்ளப்பெருக்கு 2) சுனாமி 3) வரட்சி 4) காட்டுத்தீ

09. புத்த பெருமானின் பிறப்பு, ஞானம்பெறல், பரிநிர்வாணமடைதல் எனும் மூன்று நிகழ்வுகளையும் நினைவூட்டும் சமயவிழா.

1) பொசன் தினம் 2) எசல 3) வெசாக் தினம் 4) புதுவருடம்

10. காலநிலை மற்றும் வானிலையால் ஏற்படும் இயற்கை அனர்த்தம்.

1) புவிநடுக்கம் 2) சுனாமி 3) வரட்சி 4) எரிமலை

11. பாதசாரிகளால் ஏற்படும் விபத்துக்களுக்கான காரணங்களில் ஒன்று.

1) இரவு நேரத்தில் வெள்ளை நிற ஆடைகளை அணிந்து செல்லல்
2) பாதையைக்கடப்தற்கு மஞ்சள் கோட்டு கடவையை பாவித்தல்
3) வீதி ஒழுங்கு முறையை அனுசரித்தல் .
4) வீதியின் இடப்பக்கமாகப் பயணித்தல்

12. இலங்கையில் வரட்சியால் அதிகளவில் பாதிக்கப்படும் வலயம்.

1) உலர் வலயம் 2) ஈரவலயம் 3) மலைநாடு 4) கரையோரம்

13.  தரப்பட்ட வீதிக்குறியீடு வெளிப்படுத்தி நிற்கும் விடயம்.

1) முன்னால் சுற்றுவளைவு 2) முன்னால் நிறுத்தவும்
3) முன்னால் வழிவிடவும் 4) முன்னால் ஒழுங்கை

14. விவசாயத்துறைசார்ந்த தொழில்களில் ஒன்று

1) அழகுக்கலை 2) கொழுந்தெடுத்தல்
3) கைத்தொழில் 4) சேவைத்தொழில்

15. இலங்கையில் களிமண் சார்ந்த உற்பத்திப் பொருட்களுக்குப் பிரசித்தமான பிரதேசம்

1) பிலிமத்தலாவ 2) மொலகொட
3) கஜீகம 4) அம்பலாங்கொட

16. தமது கரங்களால் ஏதேனுமொரு உற்பத்தியில் ஈடுபடுவோரை அழைக்கும் விதம்.

1) நீலக்கழுத்துப்பட்டி வேலை 2) வெள்ளைக்கழுத்துப்பட்டி வேலை
3) உடல்சார் வேலை 4) மூளைசார் வேலை

17. ஊழியர் ஒருவருக்குரிய உரிமைகள்.

1) உத்வேகத்துடன் உழைத்தல் 2) நல்ல பண்புகளைக் கடைப்பிடித்தல்
3) பாதுகாப்பான வேலைத்தளம் 4) உரிய நேரத்திற்குச் சமூகமளித்தல்



kalvi.lk

18. தனிநபர்களின் தனிப்பட்ட தேவைகள் பூர்த்தியாகும் போதே சிறந்த உற்பத்திகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனக் கூறிய அறிஞர்கள்.

1) பைதகரஸ்,மாஓசேதுங்　　2) பிளேட்டோ,அரிஸ்டோட்டில்

3) எடிசன், தாந்தே　　4) கார்ல்மார்க்ஸ், மாஸ்லோ

19. வேலையுலகில் விஷேடமான பயிற்சியும், அனுபவமும் முக்கியத்துவம் பெறும் தொழில்கள்.

1) மீன்பிடி, விவசாயம்　　2) சத்திரச்சிகிச்சை, விண்வெளிப் பயணம்

3) வியாபாரம், கொழுந்தெடுத்தல்　　4) சுயதொழில், வீட்டு அலங்காரம்

20. வருடந்தோறும் சர்வதேச தொழிலாளர் தினம் கொண்டாடப்படுவது.

1) மார்ச் 22　　2) ஒக்டோபர் 10　　3) மே 01　　4) ஏப்ரல் 2

(20x2=40 புள்ளிகள்)

## பகுதி II

❖ முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01.

1) குடியியற்கல்வி பாடத்தில மூன்றாம் தவணைக்கென பூர்த்தி செய்வதற்கு ஆசிரியரால் வழங்கப்பட்ட கணிப்பீட்டு வகையைப் பெயரிடுக. (2 புள்ளிகள்).

2) மேற்படி கணிப்பீட்டிற்காக வழங்கப்பட்ட தலைப்பு யாது? (2 புள்ளிகள்)

3) கணிப்பீட்டை பூர்த்தி செய்வதற்காகத் திரட்டிய தகவல்கள் இரண்டினை எழுது (2 புள்ளிகள்)

4) கணிப்பீட்டை பூர்த்தி செய்வதனால் பாடவிடய ரீதியாக நீர் பெற்றுக்கொண்ட நன்மைகள் இரண்டு தருக. (4 புள்ளிகள்)

02.

1) பொதுச் சேவைகளை அவை வழங்கப்படும் தன்மையிலான அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்துக. (3 புள்ளிகள்)

2) i) இலங்கை அரசினால் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்ற சேவைகள் இரண்டினைத் தருக. (2 புள்ளிகள்)

ii) பொதுச் சேவையின் முக்கியத்துவம் இரண்டினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

3) i) இலங்கை போக்குவரத்துச் சபை மூலம் நடைமுறைப்படுத்தப்படும் விஷேட சேவைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii) பொதுப் போக்குவரத்துச் சேவைகளை முன்னேற்றுவதற்கு அரசினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மூன்றை எழுதுக. (3 புள்ளிகள்)

03.

1) குடும்பத்தில் காணப்படும் ஜனநாயகப்பண்புகள் மூன்றினை எழுதுக. (3 புள்ளிகள்)

2) i) குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து கலந்துரையாடித் தீர்மானங்கள் மேற்கொள்ளும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)



kalvi.lk

ii) ஜனநாயக வாழ்க்கை முறைக்குப் பழக்கப்படுத்துவதற்காகப் பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்படும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் இரண்டு குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

3) i) இலங்கையில் சிறுவர் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும், பாதுகாப்பதற்குமென செயற்படுகின்ற இரண்டு நிறுவனங்களை எழுதுக. (2புள்ளிகள்)

ii) பாதகாமான மனவெழுச்சிகளை சமநிலைப்படுத்த மேற்கொள்ளக்கூடிய ஆக்கச் செயற்பாடுகள் மூன்றைத் தருக. (3 புள்ளிகள்)

04.

1) சுனாமிப் பேரலைகள் உருவாவதற்கான மூன்று காரணங்களைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

2) i) வரட்சி காரணமாக ஏற்படும் இருவிளைவுகளைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii) நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு நாம் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் இரண்டினை எழுதுக. (2 புள்ளிகள்)

3) i) அனர்த்தங்கள் மற்றும் விபத்துக்களின் போது உதவி பெற்றுக்கொள்ளக்கூடிய இரண்டு நிறுவனங்களைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

ii) வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதில் சாரதிகளுக்குள்ள மூன்று பொறுப்புக்களைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

05.

1) மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் மூன்றை எழுதுக. (3 புள்ளிகள்)

2) i) தமது வாழ்வில் சவால்களுக்கு முகங்கொடுத்து வெற்றிகொண்ட இரு நபர்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii) சவால்கள் வெற்றி கொள்ள நாம் வளர்த்துக் கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கு தருக. (2 புள்ளிகள்)

3) i) மனித வாழ்வில் எதிர் நோக்கும் பல்வேறு விதமான பிரச்சினைகளில் இரண்டினைத் தருக. (2 புள்ளிகள்)

ii) பிரச்சினைகளைத் தீர்ப்பதன் மூலம் கிடைக்கும் பயன்கள் மூன்று எழுதுக. (3 புள்ளிகள்)

06.

1) வேலை உலகில் தொழில்களை வழங்கும் மூன்று துறைகளையும் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

2) i) தொழிற்பற்றுடன் செயற்படுவதால் தொழில் செய்பவருக்குக் கிடைக்கும் பயன்கள் இரண்டினைத் தருக. (2 புள்ளிகள்)

ii) சமூகம் ஒன்றின் அபிவிருத்திக்காக நிறைவேற்ற வேண்டியதேவைகளில் இரண்டினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

3) i) உமது பிரதேசத்தில் அமைந்துள்ள தொழிற்பயிற்சி வழங்கும் இரு நிறுவனங்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii) தற்காலத்தில் ஊழியர் ஒருவர் வளர்த்துக் கொள்ள வேண்டிய பண்புகளில் மூன்றினை எழுதுக. (3 புள்ளிகள்)


kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457